எப்ப மாமா விடுதலை எழுந்து சொல்லு ஒரு முறை
சின்ன மலர்கள் நாங்கள் பாடுகிறோம்
எப்ப மாமா விடுதலை ஏக்கம் காணுது தலைமுறை
வெல்லும் வழியை நாங்கள் தேடுகிறோம்

தேசம் காண நீங்கள் சென்ற பாதை மாற வில்லையே
தேகம் எல்லாம் இன்னல் ஓடும் வீரம் மறைய வில்லையே
வெல்லும் காலம் சொல்லும் நாளை தேடுகிறோம்
உங்கள் கனவை அள்ளி மனதில் சூடுகிறோம்

பாச விழியால் நீங்கள் வாழ்ந்த தேச வாழ்வை சுவாசித்தோம்
பாயும் புலியாய் நீங்கள் வென்ற போரின் கதையை வாசித்தோம்
எங்கள் வாழ்வு முழுதும் வாசமான உங்கள் வீரம் வாழ்கவே
எங்கள் வாசல் தொட்டு  தேசக்காற்றாய் உங்கள் மூச்சு ஆழ்கவே
வெல்லும் காலம் சொல்லும் நாளை தேடுகிறோம்
உங்கள் கனவை அள்ளி மனதில் சூடுகிறோம்

எப்ப மாமா விடுதலை எழுந்து சொல்லு ஒரு முறை

திசைகள் யாவும் நீங்கள் நடந்த தீரதடங்களை பார்க்கிறோம்
விடியல் காண கூவும் உங்கள் உரிமை குரலை கேட்கிறோம்
மண்ணில் குருதி சிந்தி வீழ்ந்த விதைகள் எழுகைகொள்ளும் காலமே
விரர் குழிகள் மீது சபதம் செய்து வெல்லும் தமிழர் ஈழமே
வெல்லும் காலம் சொல்லும் நாளை தேடுகிறோம்
உங்கள் கனவை அள்ளி மனதில் சூடுகிறோம்

எப்ப மாமா விடுதலை எழுந்து சொல்லு ஒரு முறை